# வாழ்க்கை முயற்சி வழியா, விதி வழியா?

**லலிதா சீதாராமன்**

*Asst. Manager (System Analysis) CPPD, CO*

வாழ்க்கையைப் பற்றி பல விளக்கங்களும் அறிவுரைகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. வாழ நினைத்தால் வாழலாம் என்று ஒரு புறமும், விதி யாரை விட்டது என்று மறுபுறமும் இரண்டு வாதங்கள் வழங்கி வருகின்றன. திருக்குறள் அன்றாட வாழ்க்கைக்கு ஒரு குறிப்புப் புத்தகம் போல உதவிக்கு வருகிறது. யதார்த்த அணுகுமுறையில் அனைத்துப் பிரச்சினைகளையும் அலசுகிறது. நம்முடைய மன ஓட்டம் என்னவாக இருந்தாலும் அதன் தொடர்பாக ஏதாவது ஒரு குறள் கிடைக்கிறது.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என ஒரு குறள் உறுதிமொழி கூறும்போது மற்றொரு குறள்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்று யதார்த்த நிலைக்கு நம்மைத் தயார்ப்படுத்துகிறது. வாழ்க்கை என்பது ஒரு மனிதனோடு மட்டும் சம்பந்தப்பட்டதாக இல்லாமல் அவன் + பிறர் + விதி என்று சமன்பாடாக (equation) இருக்கிறது. இந்த சமன்பாட்டில் ஒவ்வொரு கூறும் (component) வாழ்க்கையை எவ்வாறு மாற்ற வல்லது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

மேலே கூறிய வாழ்க்கைச் சமன்பாட்டில் 'அவன்' என்ற கூறு முயற்சி என்பதோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. ஒரு மனிதன் தான் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை, தன்னுடைய எண்ணங்களாலும் முயற்சியாலும் உழைப்பாலும், ஒரு நபரிடம்தான் செயலாக்க முடியும். அந்த நபர் வேறுயாருமில்லை – அது அவனேதான். முன்னேற விரும்பும் மனிதன் திட்டமிட்டு முன்னேறும் பிறரைக் கண்டு பரவசமடைகிறான். இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் தேவை என்று டாக்டர். மன்மோகன் சிங் கூறிய 'Killer Instinct' என்ற வார்த்தைகள் அவனுக்கு மிகவும் பிடித்துப் போகின்றன. கருமமே கண்ணாகச் செயலாற்றுகிறான். வாழ்க்கையில் ஒவ்வொரு முறை தோல்வி கிடைக்கும் போதும் மேலும் கடுமையாக உழைக்கிறான்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்ற குறளை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்கிறான். புதுப்புது முயற்சிகள் செய்து தோல்விகளையும் வலிகளையும் மறக்க முயல்கிறான்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

என்ற குறளை நினைவு படுத்திக் கொண்டு உயர்ந்த குறிக்கோள்களை மனத்தில் கொள்கிறான். 'வெற்றி என்பது விழாமல் இருப்பதல்ல, விழுந்த ஒவ்வொரு முறையும் எழுந்து நிற்பதுதான் வெற்றி' என்பது அவனுக்குப் புரிகிறது. முயற்சியால் முன்னேறிய மனிதன் சிறிது தொலைவு சென்றவுடன் தன்னுடைய சுற்றத்தையும் நண்பர்களையும் திரும்பிப் பார்க்கிறான். அவர்களையும் தன்னுடன் அழைத்துச் செல்ல முயல்கிறான். இவ்வாறு முயற்சி ஒரு தொடர் வெற்றியைத் தருகிறது.

'பிறர்' என்ற கூறு அந்த மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அவனுடைய வெற்றி பிறருடைய பார்வையில்தான் நிச்சயிக்கப்படுகிறது. பிறருடைய பார்வை பல கோணங்களைக் கொண்டதாக இருக்கிறது.

ஒரு சராசரி மனிதன் முன்னேறிவிட வேண்டும் என்ற வெறியுடன் செயல்படும் போது உலகம் முதலில் அவனை சுயநலக்காரன் என நினைக்கிறது. அவன் படிப்படியாக முன்னேறி மற்றவர் முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும்போது உலகம் அவனை உற்றுக் கவனிக்க ஆரம்பிக்கிறது. அவனுடைய வெற்றி, அது எவ்வளவு சிறிய அளவில் இருந்தாலும். ஒரு சிலரையாவது பரவசப் படுத்துகிறது. அவர்களும் அவனைப் போலவே திட்டமிட்டு முன்னேற முயல்கிறார்கள். மேலும், தன்னுடைய மற்றும் தன்னைச் சார்ந்தவர்களுடைய வெற்றியை அவனிடம் சொல்லி, அவன் மகிழ்வதைப் பார்த்து அவர்கள் பெருமிதம் கொள்கிறார்கள்.

கடுமையாக உழைக்கும் அவனிடம் பிறர் துன்பத்தைக் கண்டு உள்ளம் நெகிழும் மென்மையும் இருக்கிறது. சொல்லொணாத் துன்பத்தை அனுபவிப்பவர்களைப் பார்த்தால் அவன், மனம் கசிகிறான். அவன், தன்னுடைய எழுத்துக்களாலும் சொற்களாலும்

காயம்பட்ட பிறரது இதயத்திற்கு மருந்திட வல்லவன் என்பதை நெருங்கியவர்கள் அறிகிறார்கள்.

பிறரின் வெற்றியைக் கண்டு மகிழ்ந்து துன்பத்தைக் கண்டு நெகிழும் அவன் மனம் மற்ற நேரங்களில் ஏனோ தாமரை இலைத் தண்ணீராக இருக்கிறது. அவனை அறியாத பிறர் அவனுடைய மௌனத்தால் காயப்பட்டுப் போகிறார்கள். அவர்கள் அவனை ஒரு கர்வம் பிடித்தவனாகப் பார்க்கிறார்கள்.

பிறரின் ஆக்கபூர்வமான விமரிசனம் அவன் முன்னேறுவதற்கு ஏணிப் படிகளாக அமைகின்றன.

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்னும் குறள் பிறரின் ஆலோசனைகள் ஒருவனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும்

> "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் குறள் பிறரின் கருத்தில் உள்ள உண்மைகளை அறிய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் கூறுகின்றன.

இவ்வாறு அவனும் பிறருமாக நடத்தி வரும் வாழ்க்கை எப்போதுமே நினைத்தபடி அமைந்து விடுகிறதா? இங்கேதான் 'விதி' என்ற மூன்றாவது கூறு தன்னால் முடிந்ததைச் செய்கிறது. 'விதி' என்ற பெயர் அதற்கு எவ்வளவு முரண்பாடானது (ironic) ! எந்த விதியும் (rule) இல்லாமல் செயல்படும் அதற்கு யார் 'விதி' என்று பெயர் வைத்தார்கள்? 'கடவுளே ! நான் என்னுடைய வாழ்க்கையை ஒரு தவம் போல் வாழ முயற்சி செய்கிறேன். பதிலுக்கு நீ எனக்கு ஒரு வரம் கொடு. உலகத்தில் துன்பம் இயல்புதான், ஆனால் அடிமனம் கசிந்து வருந்தி அழும்படியான துயரத்தை யாருக்கும் கொடுக்காதே' என்று நாம் மனமார வேண்டிக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொள்கிறோம், நிறைவேறுகிறதா?

> "இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு"

என்னும் குறள் ஒருவன் தெளிந்த அறிவுடையவனாக இருந்தாலும் அவன் செல்வந்தனாகவும் இருப்பான் என்பதற்கு எந்த நியதியும் இல்லை எனவும்

> "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது".

என்னும் குறள் அவன் செல்வந்தனாக இருந்தாலும் அச்செல்வத்தை அனுபவித்து மகிழ கொடுப்பினை இருந்தால்தான் முடியும் எனவும் விளக்கி உலக மக்களின் பரிதாப நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஆக, இந்த வாழ்க்கைச் சமன்பாட்டில் நம்முடைய வெற்றி தோல்வியும் இன்ப துன்பமும் நம் கையில் மட்டும் இல்லை என்று தெரிகிறது. இருந்தாலும் நம் நிலையை உயர்த்திக் கொள்ளும் முயற்சியை நாம் செய்துதான் ஆக வேண்டும்.

> "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"

என்கிறார் வள்ளுவர். அதாவது தன்னிடம் ஒன்றும் இல்லை என்று கூறிக் கொண்டு சோம்பி இருப்பவர்களைக் கண்டு நிலமகள் எள்ளி நகைப்பாளாம். மேலும்,

> "உழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்."

என்ற குறள் மூலம் 'விதியையும் முயற்சியால் வெல்ல முடியும்' என்று வள்ளுவர் உறுதியிட்டுக் கூறுவதால் நாம் மேலும் மேலும் உழைத்து நம்மை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்வோமாக.

## OUR STAFF TRAINING COLLEGE
### *Writes to us...*

'Vidya Deepam, the Quarterly Journal of our Staff College carries Crossword Puzzle. Staff Members are requested to solve the puzzle and send entries to the Editor, Vidya Deepam. The names of the first four staff members from Chennai city and six from other places who solve the puzzle correctly will be published in the next issue of Vidya Deepam and they will get the next four issues of Vidya Deepam free of cost.